செய்தி வெளியீடு எண்:179 நாள்: 25.2.2010

## செய்தி வெளியீடு

## காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் அருகே ஏரியில் மூழ்கி உயிரிழந்த மூன்று குழந்தைகளின் குடும்பங்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மூன்று இலட்சம் ரூபாய் நிவாரண உதவி !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், அம்மனூர் மதுரா கீழச்சேரி கிராமத்தில் உள்ள ஏரியில் குளிப்பதற்காகச் சென்ற திரு.முனுசாமி என்பவரின் ஒன்பது வயது மகள் சந்திரகலா, அவரின் எட்டு வயது மகன் மணிகண்டன், திரு.அழகேசன் என்பவரின் 10 வயது மகள் காயத்ரி ஆகிய மூவரும் ஏரியின் ஆழமான பகுதிக்குச் சென்றதில் தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டனர். இதுகுறித்த தகவல் மதுராந்தகம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கே.காயத்ரி தேவி மூலமாக தமது கவனத்திற்கு வந்ததைத் தொடர்ந்து மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்ததுடன், உயிரிழந்த குழந்தைகளின் குடும்பத்தாருக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (25.2.2010) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.